# அபிவிருத்தி லொத்தர் சபை

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

***(1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)***

**அபிவிருத்தி லொத்தர் சபையில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

---

**(1) பதவியின் பெயர் : முகாமைத்துவ உதவியாளர் - தரம் III (தொழில்நுட்பம் அல்லாத)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை : 07**

**சம்பள வகுதி : MA - 1-2**

**சம்பள அளவு : ரூபா 46,220 - 10x540 - 7x630 - 12x1080 – 12x1280 - 84,350**

**(முகாமைத்துவச் சேவை 01/2005ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம்)**

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்***

(அ) கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

***உள்வாரியாக ஆட்சேர்த்தல்***

(அ) ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' யில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம்/தமிழ்

II. கணிதம்

எனும் பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள்:**

(அ) தமிழ் மொழியில் கதைத்தல், எழுதுதல் மற்றும் புரிந்துகொள்ளும் ஆற்றல்.

(ஆ) அரச / அரை அரச அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் விற்பனை / கணக்கு / பெறுகை மற்றும் நிர்வாகம் போன்ற பிரிவுகளில் அனுபவம் மற்றும் மேலதிக கல்வித் தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

---

**(2) பதவியின் பெயர் : சந்தைப்படுத்தல் இணைப்பாளர் - தரம் III**

**(இந்தப் பதவி முழு நேர வெளிக்கள கடமையைக் கொண்டது என்பதுடன் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டது)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை : 01**

**சம்பள வகுதி : MA - 1-2**

**சம்பள அளவு : ரூபா 46,220 - 10x540 - 7x630 - 12x1080 – 12x1280 - 84,350**

**(முகாமைத்துவச் சேவை 01/2005ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம்)**

**தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்***

(அ) கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

***உள்வாரியாக ஆட்சேர்த்தல்***

(அ) ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' யில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம்/தமிழ்

II. கணிதம்

எனும் பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

---

**(3) பதவியின் பெயர் : வெளிக்கள மேம்பாட்டாளர் (தரம் III)**

**(இந்தப் பதவி முழு நேர வெளிக்கள கடமையைக் கொண்டது என்பதுடன் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவற்கு கட்டுப்பட்டது)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை : 02**

**சம்பள வகுதி : PL - 1**

**சம்பள அளவு : ரூபா 40,500 – 10 X 450 – 10 X 490 – 7 X 540- 15 X 590 -62,530**

**(முகாமைத்துவச் சேவை 01.˙.2005ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம்)**

**தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுத் துறையில் ஒரு வருட சேவை அனுபவமும் இருத்தல் வேண்டும்.

சந்தைப்படுத்தல் இணைப்பாளர் (தரம் III) பதவி மற்றும் வெளிக்கள மேம்பாட்டாளர் (தரம் III) பதவி எனும் 02 பதவிகளுக்கும் தேவையான மேலதிக தகைமைகள்:

(அ) வெளிக்கள சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வேலைகளைச் செய்திருத்தல்

(ஆ) மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி உரிமம் வைத்திருத்தல்

(இ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் இயலுமை

(ஈ) தமிழ் மொழியில் கதைத்தல், எழுதுதல் மற்றும் புரிந்துகொள்ளும் ஆற்றல்.

**பொது நிபந்தனைகள் :**

i. வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**II.** நியமனத்தின் தன்மை : ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துவத்துடன்

**III.** ஏனையவை : சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் ரீதியிலான தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும். சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**VI.** ஆட்சேர்க்கும் முறை : நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை அல்லது பிரசித்த விளம்பரமொன்றைப் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அந்தப் பதவிக்கு இயைபான வகையில் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை அல்லது / மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் (வாய் மூலம் / எழுத்து அல்லது செயன்முறைப் பரீட்சை) அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

**V. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2025-07-04.**

அனைத்துக் கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களில் சான்றுபடுத்திய பிரதிகள் சகிதம் விண்ணப்பதாரரினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2025-07-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அல்லாவிடில் விண்ணப்பப் படிவத்தை அபிவிருத்தி லொத்தர் சபையின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். அமைச்சுகள் / திணைக்களங்கள் / ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**